அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்– இவர்களிடம் அக்கறை கொள்வோர் யார்?

தேவன் அக்கறை கொள்கிறார்

. . .நமக்கு அக்கறை உண்டா?

DEREK PRINCE

Originally published in English under the title
"WHO CARES FOR ORPHANS WIDOWS THE POOR AND
OPPRESSED GOD DOES. . . DO WE?"

"WHO CARES FOR ORPHANS WIDOWS THE POOR AND
OPPRESSED GOD DOES. . . DO WE?" (Tamil Edition)
"Anathaial Vithavaikal, Elaikal, Odukkappator"
Published by permission in the Tamil language
Translated into Tamil language by:

Rev. V. Victor Gnanaraj

Language Code -TA/B-46/Dec. 2000/3000/DPM-SI (SR)

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - S.INDIA
18/32 Mangammal Salai, Renganagar
Trichy - 620 021
Tamil Nadu, S.India.
E-mail: r_m_c@vsnl.com
Phone : 00-91-431-459464 / 459664
Fax: 00-91-431-459564

Derek Prince Ministries
http://www.derekprince.com

அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் இவர்கள்பால் அக்கறை கொள்வோர் யார்? தேவன் கவனம் செலுத்துகின்றார். . . நீங்கள் செலுத்துகின்றீர்களா?

இவ்வேளையில் தேவனுடைய மக்களை அவர் முழுவீச்சில் விடுவித்து முழுமையான அருட்செய்தி பணிக்கு வழிநடத்தும் திறவுகோலை அவர் என் இதயத்தில் அளித்துள்ளார் என்பதை நான் விசுவாசிக்கிறேன். இதன் கருப்பொருள் என்னவெனில் அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்—இவர்களைக்குறித்து கிறிஸ்தவர்களாகிய நமது உத்திரவாதம் என்ன?

அநேகர் விதவைகளையும் அனாதைகளையும் பற்றி பேசுகின்றனர், ஆனால் வேதம் வேறு கண்ணோட்டத்தில் அனாதைகள், விதவைகள் என்னும் வரிசையில் பேசுகின்றது; ஏனெனில் அனாதைகள் முற்றிலும் உதவியற்றவர்களாய் உள்ளனர், விதவைகளோ பகுதியளவே உதவியற்றவர்களாவார்கள். நாம் உணர்ந்ததற்கும் மேலாக இப்பொருள் பற்றி வேதம் நிறையச் சொல்கின்றது. ஐம்பது ஆண்டுகட்கு மேலாக நான் பிரசங்கம் பண்ணிவருகின்றேன்; ஆனால் இப்பொருளைப்பற்றி கடந்த சில வாரங்களிலும் மாதங்களிலும் நான் கண்டவாறு இதுவரை காணவில்லை.

டேனிஸ் நாட்டவரான என் முதல் மனைவி லீதியாள் 1928ல் எருசலேமில் ஒரு சிறார் இல்லத்தை ஆரம்பித்தாள். மரிக்கும் தருவாயிலிருந்த ஒரு யூத சிறுவனை எடுத்தாள்.

அக்குழந்தையைச் சுற்ற துணியின்றி தன் பெட்டியிலிருந்து உள்ளாடையை எடுத்து அதைச்சுற்றி, அதைக் கவனிக்களானாள். இச்சம்பவம் "Appointment in Jerusalem" என்றும் அவள் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. அது சுவையான முறையில் நடந்த உண்மைச்சம்பவம். இப்படிப்பட்டவளே என் மனைவி என்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

முறையான வழியிலே அனாதைகள், விதவைகள், நலிவுற்றோர் போன்றவர்கள்பால் நமக்குள்ள பொறுப்பு பற்றி கூறவிரும்புகிறேன். முதலாவது தேவனுடைய பண்பு பற்றி கற்றுக்கொள்ள முற்படுவோம். தேவனுடைய செயற்பாட்டில் நீதியைப்பற்றி காலாகாலங்களில் நோவாவின் பெருவெள்ளம் முதல், முற்பிதாக்களின் காலத்தில், மோசேயின் நீதிச்சட்ட நாட்களில், தீர்க்கதரிசிகளின் காலத்தில் அவர் கூறியுள்ளதை காண்போம். இறுதியில் பொதுவான வாக்குத்தத்தங்கள் பற்றியும் எச்சரிப்புகள் பற்றியும் காண்போம்.

தேவனுடைய பண்பு

முதலாவதாக தேவனுடைய பண்பைப்பற்றி காண்போம். சங்கீதம் 68:5ல் தேவன் கூறுகிறார்:

> ***5 தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்.***

இதுவே தேவனுடைய பண்பு. அவர் தந்தையற்றோருக்குத் தந்தை; விதவைகளின் சார்பில் பேசுகின்றவர்.

சங்கீதம் 103:6ல் கூறுகின்றது:

> ***6 ஒடுக்கப்படுகிறயாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்.***

ஒடுக்கப்பட்டோரை தேவன் எவ்வளவு காருண்யத்துடன் கவனிக்கின்றார் என்பதை நம்மில் அநேகர் உணரவில்லை. மனுக்குலம் அனைத்துமே ஏதோ ஒரு காலகட்டத்தில் நெருக்கப்பட்டுள்ளது. நன்மையானதைப் பெற்று கனத்துடன் நடத்தப்படுவோர் மனுக்குலத்தில் மிகச்சிலரே. மனுக்குலத்தில் பெரும் பகுதி இன்று நீதியற்ற நிலையில் நேர்மையற்ற நிலையிலேயே நடத்தப்படுகின்றனர். தேவன் அவர்கள்பேரில் அக்கறை கொள்கிறார். அவர்களுக்கு உதவி செய்ய விரும்புவது மட்டுமல்லாமல், அவர்களை ஒடுக்குவோரின் பேரில் கடுங்கோபம் கொள்கிறார்.

சங்கீதம் 140:12*ல்:*

> [12]***சிறுமையானவனின் வழக்கையும், எளியவர்களின் நியாயத்தையும் கர்த்தர் விசாரிப்பாரென்று அறிவேன்.***

பாதிக்கப்பட்டோரை கவனிப்பது தேவனுடைய பண்பு. அவர் ஏழைகட்கு நீதி செய்கிறார். பெரும்பாலான இடங்களில் ஏழைகள் நியாயம் பெறுவதில்லை என்பதனை தைரியத்துடன் ஒத்துக்கொள்வோம். கட்டாயமாக பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் இவர்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை.

நீதிக்கு தேவையானவை

வேதம் குறிப்பிடும் எல்லாக் காலங்களிலும் தேவனுடைய நீதியின் வரம்பு என்ன என்பதின் படத்தைச் சிந்திப்போம். முற்பிதாக்களின் காலமுதல் (மோசேயின் நீதிச்சட்ட நாட்களுக்கு முன்பிருந்தே) இதைக் காண்போம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அவர்களின் காலமுதல் அதற்கு முன்புள்ள காலமுதல் இதனை நோக்குவோம்.

முற்பிதாக்கள்

தேவனுடைய நீதியைக்குறித்துப் பேசும் பிரதானமான

புத்தகம் யோபுவின் புத்தகம். அது கவர்ச்சியுடன், ஓர் உந்துதலை உண்டாக்கி அறைகூவலை வைக்கும் ஒரு புத்தகம். யோபு 29ம் அதிகாரத்தில் யோபு தானே தன் நீதியைக் குறித்து ஒரு படத்தைத் தீட்டுகின்றார். மக்களை யோபு நடத்திய விதம் என்முன் ஓர் அறைகூவலை வைக்கிறது. யோபு 29:11–13 வசனங்களைக் காண்போம்:

> [11]என்னைக் கேட்ட காது என்னைப் பாக்கியவான் என்றது; என்னைக் கண்ட கண் எனக்குச் சாட்சியிட்டது. (வேறு வார்த்தைகளில் சொன்னால் மனிதர் தயவு எனக்குக் கிடைத்தது. ஏன்?)
>
> [12]முறையிடுகிற ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தேன்.
>
> [13]கெட்டுப்போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது; விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப்பண்ணினேன்.

யாரைப்பற்றி இங்கு அவர் பேசுகிறார்? தகப்பனற்றோர், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்– இவர்களைப்பற்றியே பேசுகிறார். அதற்குப் பின்பு நம் கவனத்தை ஈர்க்கும் கூற்றினைச் சொல்கிறார். கொள்கைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்போருக்கு அவர் கூறுகிறார்:

> [14]நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது என் உடுப்பாயிருந்தது; என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாய் இருந்தது. யோபு 29:14

நம் எவருக்கும் சொந்த நீதி என்பது கிடையாது. யோபுவின் முற்பிதாக்களின் காலம் முதலே “நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது என் உடுப்பாயிருந்தது; என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாய் இருந்தது.” என்கிறார். தேவனுக்கு முன்பாக நீதிமான் என்று எண்ணப்பட்ட அனைவருமே எல்லாக்காலத்திலும்

தங்களுக்கு சொந்தமல்லாத நீதியினாலேயே போர்த்தப்படுகின்றனர். நீதி என்பது பின்வருமாறு விளக்கப்படுகிறது:

> [15]நான் குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன்.
>
> [16]நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து, நான் அறியாத வழக்கை ஆராய்ந்துபார்த்தேன்.
>
> [17]நான் அநியாயக்காரருடைய கடைவாய்ப் பற்களை உடைத்து, அவர்கள் பறித்ததை அவர்கள் பற்களிலிருந்து பிடுங்கினேன். (யோபு 29:15–17)

யோபுவின் நீதியைப் பற்றி கவனியுங்கள். அவர் "ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தேன். கெட்டுப்போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என் மேல் வந்தது; விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப்பண்ணினேன்" என்கிறார். நீங்கள் இப்படி சொல்லக் கூடுமா? விதவையின் இருதயம் கெம்பீரமாகும்படி ஏதாவது செய்திருக்கிறீர்களா? விதவைகள் வெகு தூரத்தில் இல்லை. இதைப் பின்பு காண்போம்.

பின்பு யோபு 31ல் தேவனுக்கு முன்பு தனது நீதியைக் கூறுகிறார் யோபு. அவர் செய்யாத பாவங்களையும் குற்றங்களையும் பட்டியலாகக் கூறுகிறார். யோபு 31ல் ஒரு பகுதிக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன். இவைகள் பாவமாக இருக்கின்றபடியால் யோபு இவைகளைச் செய்யவில்லை என்று கூறுகிறார். இந்த காரியங்களை யோபு செய்திருப்பாரானால் தேவனிடத்திலிருந்து எந்த இரக்கத்தையும் அவர் எதிர்பார்த்திருக்க முடியாது.

> [16]எளியவர்கள் வாஞ்சித்ததை நான் கொடாதிருந்து, விதவையின் கண்களைப் பூத்துப்போகப்பண்ணி,
>
> [17]தாய்தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில்

சாப்பிடாமல், நான் ஒருவனாய்ச் சாப்பிட்டதுண்டோ? (யோபு 31:16,17)

விதவையின் கண்களைப் பூத்துப்போகப்பண்ணுதல் தாய் தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில் சாப்பிடாமல் தான் ஒருவனாய் சாப்பிடுதல் போன்றவற்றை யோபு பாவமாகக் கூறுகிறார். இவைகளைச் செய்யாத குற்றத்திற்கு தான் ஆளாகவில்லை என யோபு கூறுகிறார். இப்படி நீங்கள் கூறக் கூடுமா?

பின்னும் தொடர்ந்து அவர் கூறுவதாவது:

18 என் சிறுவயதுமுதல் அவன் தகப்பனிடத்தில் வளர்வதுபோல என்னோடே வளர்ந்தான்; நான் என் தாயின் கர்ப்பத்திலே பிறந்ததுமுதல் அப்படிப்பட்டவர்களைக் கைலாகுகொடுத்து நடத்தினேன்.

19 ஒருவன் உடுப்பில்லாததினால் மடிந்துபோகிறதையும், ஏழைக்கு மூட வஸ்திரமில்லாதிருக்கிறதையும். . .
(யோபு 31:18–19)

“ஏழைக்கு மூட வஸ்திரமில்லாதிருக்கிறதைக் கண்டும் அதற்கு உதவவில்லையானால்”, “அது பாவமென்கிறார்”.

பின்பு அவர் கூறுகிறார்:

20 அவன் என் ஆட்டுமயிர்க் கம்பளியினாலே அனல்கொண்டதினால், அவன் இடை என்னைப் புகழாதிருந்ததும், (யோபு 31:20)

போர்த்திக் கொள்ள வஸ்திரமில்லாதவனுக்கு தன் சொந்த ஆட்டுமயிர்க் கம்பளியின் உடையை யோபு தந்தார். இதை யோபு செய்யாமலிருந்தால், தன்னைப் பாவி என அழைத்திருப்பார்.

தொடர்ந்து அவர் சொல்வது:

21 ஒலிமுகவாசலில் எனக்குச் செல்வாக்கு உண்டென்று

நான் கண்டு, திக்கற்றவனுக்கு விரோதமாய் என் கையை நீட்டினதும் உண்டானால்,

[22]என் கைப்பட்டை தோளிலிருந்து சரிந்து, என் புயத்து எலும்பு முறிந்துபோவதாக. (யோபு 31:21,22)

இது ஒரு சிறப்பான கூற்று! அவர் கூறுவது புரிகிறதா? அவர், "திக்கற்றவர்களுக்கும் விதவைகளுக்கும் உதவி, பசியுற்றோருக்கு உணவளிக்கவில்லையானால் என் கை உடலிலிருந்ததினால் பலனில்லை என்கிறார். கரம் உடலிலிருக்கத் தேவையில்லை என்கிறார்". நீங்கள் இவ்வாறு கூற முடியுமா? நாம் கையாளும் நீதியினின்று மாறுபட்ட நீதியையா யோபு தனக்கு அமைத்துக் கொண்டார். யார் சரி?—நாமா? யோபுவா?

இந்த வார்த்தைகள் எனக்கு அறைகூவலாக இருந்தது. இவ்வார்த்தைகளை மீண்டும் மீண்டும் படித்தேன். இப்படிப்பட்ட நீதியின் வரம்பை நாம் நினைத்துப் பார்த்தது கூட இல்லையே என நான் எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். எனினும் இதையே யோபு தேவன் முன்பு கூறினார்.

மோசேயின் நீதிச்சட்டம்

தொடர்ந்து மோசேயின் நீதிச்சட்டத்தைக் காண்போம். லேவியராகமம் 19:9–10ல் விவசாயம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது:

[9]நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும்போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும்,

[10]உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும்,. . .

தானியமானாலும் சரி, திராட்சைப்பழமானாலும் சரி,

அறுவடையின் ஒரு பங்கு நிலத்தில் அறுவடை செய்யாமல் விடப்பட வேண்டும். ஏன்?

> ***" . . .அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்."***

இது மோசேயின் சட்டத்தில் இடம் பெறுகிறது. அந்த சட்டத்தைப்பின்பற்றும் ஒவ்வொருவனும் அந்நியனுக்கும் ஏழைக்கும் உதவ வேண்டும். அவர்கள் விவசாயிகளாயிருந்ததினாலே இது அவர்களின் விவசாயச் சட்டம்.

"நான் கர்த்தர்" என்று கூறி கர்த்தர் முடிக்கின்றார். இதை நான் "இப்படிப்பட்ட தேவனே நான். என்னை பிரதிபலிக்கின்றவர்கள் இவ்வாறு செய்யவேண்டும்— அந்நியனுக்கும் ஏழைக்கும் இரங்க வேண்டும். இது உங்கள் வாழ்வின் இன்றியமையாததோர் பகுதி".

உபாகமம் 14:28–29ல் ஒவ்வொரு மூன்றாம் வருடமும் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை பற்றி குறிக்கப்படுகிறது. எல்லா இஸ்ரவேலர்களுக்கும் இப்படி சொல்லப்படுகிறது:

> [28]***மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவ்வருஷத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய்.***
>
> [29]***லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியினால், அவனும்,. . . (உபாகமம் 14:28,29)***

லேவியர்கள் தேவனைச் சேவிப்பவர்கள். அவர்களுக்கென்று சுதந்திரம் கிடையாது. தேவனுடைய மக்களின் காணிக்கையே அவர்களின் சுதந்திரம். இன்று வாழும் சுவிசேஷகர்களுக்கும் மிஷனரிகளுக்கும் இவர்களை ஒப்பிடலாம்.

> [29]***லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியினால், அவனும், உன் வாசல்களில் இருக்கிற***

பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்துத் திருப்தியடைவார்களாக;. . .

தேவன் கவலை கொள்வோர் யார்: அந்நியர்கள், தகப்பனற்றவர்கள், விதவைகள். இதனை நீதிச்சட்டத்தில் சேர்த்துள்ளார். தகப்பனற்றவர்கள், அந்நியர்கள், விதவைகள்—இவர்களைக் கவனிக்காதபடி நீதிச்சட்டத்தை நிறைவேற்ற முடியாது.

தேவன் "நானே உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்கிறார். "நான் இவ்வாறே சிந்திக்கிறேன். நான் இவ்வாறேயிருக்கிறேன். என் பிரதிநிதிகள் இவ்வாறேயிருக்க வேண்டும்" என்கிறார்.

தீர்க்கதரிசிகள்

இப்பொழுது தீர்க்கதரிசிகளிடம் வருகிறோம். அநேக பகுதிகளிலிருந்து சில பகுதிகளை எடுக்கிறேன். தீர்க்கதரிசிகளைப் பற்றி பல ஆண்டுகள் கற்றதில் சில முடிவுகளுக்கு நான் வந்திருக்கிறேன். அவைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா என்று பாருங்கள்.

ஏசாயா தீர்க்கதரிசனம் முதல் தொடர்ந்து வாசிக்கும்பொழுது மூன்று பாவங்கள் தேவனுடைய கோபத்தைக் கிளறி விடுகிறது. முதலாவது சிலைவணக்கம், இரண்டாவது விபசாரம், மூன்றாவது ஏழைகள்பால் அக்கறையின்மை. சிலைவணக்கத்தில் ஈடுபடும் மக்கள் ஒழுக்கக் கேட்டிற்கு நடத்தப்படுவர். ஆவிக்குரிய ஒழுக்கக்கேடு சரீர ஒழுக்கக்கேட்டிற்கு வழி நடத்துகிறது என்பதை நான் மீண்டும் மீண்டும் கண்டிருக்கிறேன்.

நாம் சிலை வணக்கத்தைக் குறித்தும் விபசாரத்தைக் குறித்தும் அதிர்ச்சியடையும்படி எதிர்பார்க்கப்படுகிறோம். அதே தளத்தில் தேவன் மதித்து வைத்துள்ள மூன்றாவது

காரியமான ஒடுக்கப்பட்டோரை உதாசினம் செய்தல் உள்ளது. அவர் இவ்வாறு கூறுகிறார்.

> **[16] உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்;**
>
> **[17] நன்மைசெய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப் பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்.**
> (ஏசாயா 1:16–17)

தேவனுடைய பட்டியலில் முதலிடம் பெறுவது யார்? தகப்பனற்றவர்களும் விதவைகளுமே. இதைச் செய்யத்தவறுவதை தேவன் சிலைவணக்கத்தோடும் விபசாரத்தோடும் வைத்துக் கூறுகிறார். கொஞ்சம் தள்ளி அக்காலத் தலைவர்களைப் பற்றி தேவன் இஸ்ரவேலர்களிடம் கூறும்போது:

> **[23] உன் பிரபுக்கள் முரடரும் திருடரின் தோழருமாயிருக்கிறார்கள்; அவர்களில் ஒவ்வொருவனும் பரிதானத்தை விரும்பி, கைக்கூலியை நாடித்திரிகிறான்; திக்கற்ற பிள்ளையின் நியாயத்தை விசாரியார்கள்; விதவையின் வழக்கு அவர்களிடத்தில் ஏறுகிறதில்லை.** (ஏசாயா 1:23) என்கிறார்.

தகப்பனற்றோருக்கு ஆதரவாயிருப்பது சிலை வணக்கத்தோடும் விபசாரத்தோடும் சரிசமமாகக் கூறப்படுகிறது. நாம் ஒவ்வொருவரும் குட்டிப் பாவங்களின் முற்றுப் பெறாத பட்டியல் வைத்திருக்கிறோம். நான் பெந்தெகொஸ்தே சபையில் பல ஆண்டுகளாக பல பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால் அனாதைகள் விதவைகளைக் குறித்து அக்கறை கொள்ள வேண்டும் என்பது பற்றி பிரசங்கம் கேட்கவில்லை. 58 ஆண்டுகளில் ஒரு தடவை கூட அதுபற்றி கேட்கவில்லை.

நான் ஒரு பிரசங்கியாராக இருந்தும் இந்தப் பொருள் பற்றி பிரசங்கிக்காதது என்ன என்று அதிர்ச்சியடைந்தவனாய் என்னையே கேட்டுக் கொண்டேன். என் சொந்த அனுபவத்தைப் பின்பு கூறுகிறேன்.

தொடர்ந்து வாசித்தால் ஏசாயா 11ல் மேசியாவாகிய இயேசுவைப் பற்றி ஒரு தீர்க்கதரிசனம் வருகிறது.

> *[1]ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.*
>
> *[2]ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.*
>
> *[3]கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும்,*
>
> *[4]நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து,. . . (ஏசாயா 11:1–4a)*

இயேசு யாரைக் குறித்து அக்கறை கொள்கிறார். ஏழைகள், தாழ்மையுள்ளவர்கள், ஒடுக்கப்பட்டோர், நியாயம் கிடைக்காதவர்கள் இவர்களில் அக்கறை கொள்கிறார்.

நான் பிரிட்டனில் வசதியான சமுதாயத்தில் தோன்றினேன். என் தேவைகளுக்கு அதிகமான காரியங்கள் எனக்கிருந்தபடியால், எனக்கு இல்லாததைக்குறித்து நான் பேச முன்வரவில்லை. இந்நாட்டில் அநேகர் தங்களுக்குத் தேவையான சௌகரியங்கள் பெரும்பாலும் இல்லாதவர்களாகவேயிருக்கின்றனர். இதற்கு

அடிப்படையாகக் காரணம் மனிதனின் சுயநலம். ஒவ்வொருவரும் தங்கள் காரியங்கள் குறித்தே அக்கறை கொள்கின்றனர். நீ பெந்தெகொஸ்தே பிரிவைச் சார்ந்தவனாக இருப்பினும் சுயநலமுடையவனாயிருக்கக் கூடும். நீ நவமான மொழி பேசுகிறவனாக இருந்தும் உன்னைப்பற்றியே அக்கறை கொள்ளும் சுயநலவாதியாகயிருக்கக்கூடும். நவமானமொழி பேசுவதில் எனக்கு நம்பிக்கையுண்டு; நான் தினமும் நவமானமொழி பேசுகிறேன். அது என் பண்பின் குறைபாட்டிற்கு ஈடுசெய்யாது.

ஏசாயா 58ம் அதிகாரத்தை டேவிட் வில்க்கர்சன் "தொடர்ச்சியான எழுப்புதலுக்குத் திறவுகோல்" என்று அழைக்கிறார். (ஏசாயா 58:6):

> ***"அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும்,. . ." என வருகிறது.***

நான் உபவாசம் செய்வதில் நம்பிக்கையுள்ளவன். நான் ஒவ்வொருவாரமும் உபவாசிக்கிறேன். உபவாசம் முக்கியமற்றது என்று சொல்லாவிட்டாலும் தேவன் உணவு சாப்பிடாமல் இருப்பதைவிட அதிகமுக்கியமானதை இங்கு பேசுகிறார்.

> ***6 அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும்,***
>
> ***7 பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன்***

மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். (ஏசாயா 58:6–7)

தேவையில் உள்ள மக்களைக் கவனிக்காத குற்றத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோமா? 'Suburbia' என்ற ஆங்கிலச் சொல் உன் பகுதியில் வாழும் மக்களுடன் இனம் கண்டு கொள்ளாததைக் குறிக்கும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் (சிறப்பாக கருப்பு அமெரிக்கர்கள் மத்தியில்) பிரதான பட்டணங்களின் ஏழைகள், பட்டணத்தின் மையப்பகுதிக்கு சென்றதால் அங்கு வாழ்க்கைத் தரம் குறைந்துவிட்டது. இந்நேரத்தில் செல்வந்தர்கள் சுற்றுப்புறங்களுக்குச் சென்றுள்ளனர். இதற்கு அர்த்தம் என்ன? தன் சொந்த மக்களிடமிருந்து தங்களை மறைத்துக் கொள்வதாகும். உங்கள் மக்களின் தேவைகளைச் சந்திக்க மறுப்பதே இதன் காரணம்.

பின்பு இந்த ஆசீர்வாதமான வாக்குத்தத்தம் வருகிறது:

7 பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்.

8 அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்.

9 அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார். நுகத்தடியையும், விரல் நீட்டுதலையும், நிபச்சொல்லையும், நீ உன் நடுவிலிருந்து அகற்றி, . . என்று கூறப்பட்டுள்ளது.

(ஏசாயா 58:7b–9)

இங்கு பதில் பெறும் ஜெபம் பற்றி கூறப்பட்டுள்ளது. அதற்கான நிபந்தனை தேவையுள்ள மக்களின் தேவைகளை நீங்கள் சந்திப்பதில் உள்ளது. "நாம் ஏழைகளுக்கு எதிரிகளல்ல; ஆனால் அவர்களைப் பற்றி கவலைப் படாதவர்கள்."

நான் ஈட்டனிலும் கேம்பிரிட்ஜிலும் கற்றேன். தேவையுள்ள மக்கள் உண்டு என்ற எண்ணமற்ற ஒரு சமுதாயத்தில் வைக்கப்பட்டிருந்தேன். அவர்களுக்கு விரோதமாக உள்ளோம் என்று கூறாவிட்டாலும் அவர்கள்பால் அக்கறையற்றவர்களாகயிருக்கிறோம். பின்பு நான் பிரிட்டிஷ் இராணுவத்திற்கு 1940ல் அழைக்கப்பட்டேன். நான் அறிந்திராத திரள்கூட்ட மக்களுக்கு மத்தியில் வைக்கப்பட்டேன். சிறப்பாக Geordies என்ற மக்கள் மத்தியில் இருந்தேன். அவர்களை நான் நேசிக்கிறேன். அவர்கள் இரக்க சுபாவமுள்ளவர்கள். நான் பிரிட்டிஷ் இராணுவத்தில் சேர்ந்தபின் அவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை நான் அவர்களைப் புரிந்து கொள்ளவில்லை. எங்களுக்கு பயன்படுத்தக் கூடிய பொது மொழியில்லை. நான் அறியாத பல மக்கள் பிரிட்டனில் இருப்பதை நான் அறிந்தேன். சரிசெய்யப்பட வேண்டிய என்னுடைய அநேக பண்புகள் பற்றி அறிந்து கொண்டேன். என் மாம்சத்திற்கு மறைவாகவே நான் வாழ்ந்து வந்திருக்கிறேன். என் வாழ்வை இப்படியே எளிதாகக் கடத்தியிருக்கலாம். அது எப்படி மாறியது என பின்பு கூறுகிறேன்.

சோதோமின் பாவங்கள்

சோதோம் குறித்து கொஞ்சம் பேச விரும்புகிறேன். அநேக மக்கள் சோதோமின் பாவம் தங்களுக்குத் தெரியும் என நினைக்கிறார்கள். அது ஓரினச் சேர்க்கை இல்லையா? ஆனால் அந்த பாவத்தை தேவன் இங்கு குறிப்பிடவில்லை.

எசேக்கியேல் 16ம் அதிகாரம் எருசலேம் பட்டணத்தைப்பற்றி கூறப்பட்டுள்ளது. எருசலேம் சோதோமோடே ஒப்பிடப்பட்டுள்ளது. சோதோமைப் பற்றி தேவன் கூறுவது:

> ***[49]இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்; இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன; சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை. (எசேக்கியேல் 16:49)***

இங்கு ஓரினச் சேர்க்கை பற்றி குறிப்பிடப்படவில்லை. தேவன் ஓரினச் சேர்க்கையை பாவமாகக் கருதவில்லை என்று நான் சொல்லவில்லை. சோதோமின் பிரதான பாவம் சுயநலமும், உடலின்ப வேட்கையும், நிர்விசாரமான மனப்பான்மையுமே. இப்படிப்பட்ட கலாச்சாரம் உடலின்ப வேட்கையுள்ளோரையே தோற்றுவிக்கும். நம் காலத்துப் பாவமும் சோதோம் காலத்துப் பாவம் போன்றே உள்ளது. அதை வாசிப்போம்:

> ***[49]இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்; இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன; சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை. (எசேக்கியேல் 16:49)***

நமது கலாச்சாரத்தை இது எவ்வளவு தெளிவாக விளக்குகிறது. இதற்கு சிறப்பு விதிவிலக்குகள் இல்லாமலில்லை. ஓரினச் சேர்க்கை பெருகி வருவதைக் காண்கிறோம். இதற்கு நாம் பரிதாபப்படக்கூடும். இதற்கு மூலகாரணம் சுயநலமும் மற்றவர்கள் பற்றி கவலைப்படாத தன்மையுமே.

புதிய ஏற்பாட்டில்

புதிய ஏற்பாட்டில் லூக்கா சுவிசேஷத்திற்கு திருப்புவோம். இதைப்பற்றி நான் என்ன செய்யப் போகிறேன் என்று தீர்மானிக்க வேண்டும். நான் அதை பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை. இது இயேசுவிற்கு முன்னோடியாக வந்து வழியைச் செவ்வை பண்ணவந்த யோவான் ஸ்நானகனுடைய ஊழியம். அவனுடைய போதனையை "மனந்திரும்புதல்" என்னும் ஒரு வார்த்தையில் அடக்கிவிடலாம். லூக்கா 3ல் யோவான் இப்படி கூறுகிறார்:

> ***9இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றான்.*** *(லூக்கா 3:9)*

தேவனுக்கு நற்கனி தேவை. நான் தீயகனிதரவில்லை அல்லது தவறு செய்யவில்லை என்பது போதாது. நீங்கள் நற்கனி தருகின்றீர்களா? இல்லையாயின் அந்த மரம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். இது விபசாரிகளுக்கோ அல்லது வரி வசூலிப்பவர்களுக்கோ எழுதப்படவில்லை. அனைவருக்கும் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் இச்செய்திகளைக் கேட்டார்கள்.

> ***10அப்பொழுது ஜனங்கள் அவனை நோக்கி: அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.***
>
> ***11அவர்களுக்கு அவன் பிரதியுத்தரமாக: இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன் என்றான்.*** *(லூக்கா 3:10–11)*

இது குழப்பமான இறையியல் அல்ல—நீ தேவைப்படுவோரின் தேவையைச் சந்தி. இதை வாசித்த பொழுது என்னுடைய பலவிதமான ஆடைகள் பல

அலமாரிகளில் தொங்குவது என் கண்முன் வந்தது. இவைகள் எல்லாம் எனக்குத் தேவையா என்று எண்ணினேன். துணிமணிகளை குவித்துச் சேர்க்கும் பேராசை பிடித்தவனல்ல நான். எப்படியோ துணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. நான் மூன்று கண்டங்களில் ஆண்டின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்கிறேன். ஆகவேதான் இந்த நிலை. என் வாழ்வில் இக்காரியத்தில் என்றும் நான் வசனத்தினடிப்படையில் செயற்படவில்லை.

உங்களுக்கு இரண்டுவஸ்திரம் இருந்து அடுத்தவனுக்கு ஒன்றுமில்லையாயின் நீங்கள் செய்வது என்ன? அதை அவனுக்குக் கொடுங்கள். அதன் அர்த்தம் என்ன என்பது தெளிவாக உள்ளது.

லூக்கா 14 இயேசு அறிவுரை கூறுகிறார். ஒரு பரிசேயனுடைய வீட்டிற்கு விருந்திற்கு அழைக்கப்படுகிறார். சாப்பாட்டிற்குப் பின்பு பரிசேயனுக்கு இந்த ஆலோசனையை அளிக்கிறார்.

> [12]அன்றியும்அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி: நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும், உன் பந்து ஜனங்களையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்கவேண்டாம்; அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும்.
>
> [13]நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக.
>
> [14]அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்ய மாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார். (லூக்கா 14:12–14)

இது கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடியது. விருந்து வைக்கும் பொழுது யாரை அழைக்கப் போகிறீர்கள். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் தானே உண்மையில் அழைப்பைப் பெற வேண்டியவர்கள், உங்களைத் திரும்ப அழைக்க முடியாத நிலையில் இருப்பவர்கள். இக்கருத்து வேதம் முழுவதிலும் வருவதை நான் காண்கிறேன். ஓரிடத்தில் மட்டும் வரும் கருத்து இதுவன்று. வேதத்தை பல ஆண்டுகள் படித்தபொழுதிலும் கடந்த சில வாரங்கள் இச்சத்தியம் என்னில் மிகத் தெளிவாக உதயமாகியுள்ளது.

1957ம் ஆண்டு நான் வெஸ்ட்போர்ன் குரோவ் என்ற இடத்தில் வசித்து வந்தேன். அதிகாலை இரண்டு மணிக்கு தேவன் என்னை எழுப்பி காது கேட்கும்படி என்னிடம் பேசினார். நான் இருக்குமிடத்திற்கு உன்னை அழைத்துச் செல்ல விரும்புகிறேன். நான் காணாவிட்டாலும் அவர் நிற்கும் இடத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். அவர் இதைச் சொன்னார். அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கிரேட் பிரிட்டனிலும் ஒரு பெரிய எழுப்புதல் உண்டாயிருக்கும். தேவன் மெதுவாக பண்பட்ட நிலையில் இதைக் கூறினார். அவர் “அமெரிக்க ஐக்கிய நாடு” “கிரேட் பிரிட்டன்” என்று தெளிவாகக் கூறினார். நாம் தகுதியுள்ளவர்களாய் இருப்பதினாலல்ல; தேவன் தீர்மானித்ததினாலே இதை அனுப்புகிறார். பின்பு அவர் இதை எனக்குக் கூறினார். (இதை நான் வெளியே கூறுவதே கிடையாது; தேவன் விரும்புவதால் இப்பொழுது கூறுகிறேன்). “நீ பிரிட்டனில் என் கருவியாய் இருப்பாய். இதற்கான நிபந்தனை சிறிய காரியங்களிலும் பெரிய காரியங்களிலும் நீ கீழ்ப்படிதலுள்ளவனாயிருக்க வேண்டும். சிறிய காரியங்கள் பெரிய காரியங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு பெரிய காரியங்களும் முக்கியமானவை”.

பிரிட்டனில் எழுப்புதல் வெளிப்பட இச்செய்தி திறவுகோலாய் உள்ளது. ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள்

ஆலயத்து இருக்கைகளில் உட்கார்ந்து ஞானப்பாட்டுகளைப் பாடுகிறார்கள். உங்கள் உதவி அநேகருக்குத் தேவைப்படுகிறது. அவர்களில் சிலருடன் கூட உனக்குத் தொடர்பு கிடையாது. இன்று ஏழைகள், சப்பாணிகள், முடவர்கள், குருடர்கள் இவர்களுக்கு அழைப்புக் கொடுக்கக் கூறினால் யாரை அழைப்பது என்பது உனக்குப் பிரச்சினை. உன் உதவி அவர்களுக்குத் தேவை.

மத்தேயு 25ல் வெள்ளாடு, செம்மறி ஆட்டின் நாடுகள் பற்றிய தீர்க்கதரிசன உவமையைக் காண்கிறோம். அதன் முழு விளக்கத்தையும் காண முடியாவிட்டாலும் இது இறுதிகாலத்தைப் பற்றிய படம். அவர் நாடுகளை நியாயம் விசாரிக்கப் போகிறார்—வெள்ளாடு, செம்மறியாடுகள் (இவை நாடுகளைக் குறிக்கும்). செம்மறியாட்டை வலது பக்கத்திலும் வெள்ளாட்டை இடது பக்கத்திலும் நிறுத்துவார். செம்மறியாட்டை தம் அரசில் அழைத்துக் கொள்வார். வெள்ளாட்டை முற்றிலும் நிராகரிப்பார். வெள்ளாட்டு நாடுகளுக்கு கடுமையான வார்த்தைகளைக் கூறுகிறார். இப்படிப்பட்ட வார்த்தைகள் அவருடைய வாயிலிருந்து வெளிப்பட்டதேயில்லை.

> [41]*அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். (மத்தேயு 25:41)*

கர்த்தருடைய வாயிலிருந்து புறப்பட்டு வரும் எவ்வளவு கடுமையான சொற்கள் இவை!

நித்திய அக்கினி பிசாசிற்கும் அவனுடைய தூதர்களுக்குமேயன்றி மனிதர்களுக்கு உண்டாக்கப்படவில்லை. பின்பு இயேசு கூறுகிறார்:

> [42]*பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை;*

[43]அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார்.

[44]அப்பொழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள்.

[45]அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். (மத்தேயு 25:42–45)

நாம் செய்யத்தவறிய காரியத்திற்காக நித்திய ஆக்கினைக்குள் நாம் செல்லக்கூடும். நாம் செய்த காரியங்களுக்கு மட்டுமல்ல. அவர்கள் செய்ததற்காக அவர் ஆக்கினைத் தீர்ப்பளிக்கவில்லை. இது கவனிக்க வேண்டிய குறிப்பு.

மேற்கத்திய நாடுகளில் கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தாங்கள் செய்தவைகளுக்கல்ல தாங்கள் செய்யத்தவறியவைகளுக்கே நியாயத் தீர்ப்பை அடைவார்கள். இதற்கு விதிவிலக்கு இல்லை. செய்த பாவங்களுக்கு மனிதன் தண்டனை பெறுவது நிச்சயம். இது ஒரு பகுதியே. ஆனால் செய்யத் தவறிய நற்செயல்களுக்கும் தண்டனை உண்டு. இந்த வார்த்தைகளைவிட கடுமையான வார்த்தைகளை நான் வேறெங்கும் பார்க்கவில்லை:

"இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ,. . . சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்." என இயேசு கூறுகிறார்.

இவைகள் யாக்கோபின் நிருபத்தில் இருவசனங்களில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இது புதிய ஏற்பாட்டுப் போதனையின் சாரம். அது இவ்வாறு கூறுகிறது:

> **[27] திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.** (**யாக்கோபு** 1:27)

பெந்தெகொஸ்தேயைச் சார்ந்த உலகத்தாரைப்போல இருக்கக்கூடாது என்றும் பல பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறேன். உலகப்பிரகாரமான தன்மைகளுக்கு விரோதமாக பிரசங்கங்கள் கேட்டிருக்கிறேன். ஆனால் விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் நம்மில் உள்ள பொறுப்பு பற்றி பிரசங்கம் கேட்டதில்லை. என் நாட்களில் பல நல்ல பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால் யாக்கோபின் தேவனுக்கு முன்பாக இது பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்த பக்தியாக இருக்கிறது.

ஒருவன் தன்னை உலகத்தால் கறைப்படாமல் பார்த்துக் கொள்ளக் கூடும். ஆனால் இதைப்போன்றே முக்கியமானது: அனாதைகளையும் விதவைகளையும் கவனிப்பதாகும். இப்படிப்பட்ட கொள்கையை நீ பின்பற்றுகின்றாயா? அப்படியானால், உன்னை இதிலிருந்து விலக்கியது யார்? எனக்குப் பயனுள்ளதாயிருந்து ஒரு காரியத்தைக் கூறுகிறேன்.

பொதுவான வாக்குத்தத்தமும் எச்சரிக்கையும்

சிறப்பாக நீதிமொழிகளிலிருந்து சில சிறப்பான வாக்கியங்களைக் காண்போம்.

> *[17]ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். (நீதிமொழிகள் 19:17)*

ஆகவே நீ ஏழைக்குக் கொடுக்கும் பொழுது அது கர்த்தருக்குக் கடன் கொடுப்பதாகிறது. கர்த்தர் திரும்ப பதிலளிப்பார் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர் எப்பொழுதுமே கடன்பட்டவராக மாட்டார். நீங்கள் எந்த அளவு கொடுத்திருக்கிறீர்கள்? சற்று நேரம் எடுத்து உங்களையே கேளுங்கள். நீங்கள் தசமபாகம் செலுத்துகிறீர்கள். அது நல்லது, ஆனால் அது ஒரு ஆரம்பமே. அது ஒரு முக்கியமான ஆரம்பம். ஆனால் அதுவே எல்லாமல்ல.

நான் ஏழைகளுக்குக் கொடுத்ததைக் குறித்து எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். நான் ஒரு பெரிய கொடையாளி என்று கூறவில்லை. ஆனால் நான் கொடுத்ததை கர்த்தர் எனக்குத் திரும்பித்தருவார். நான் அவரை நம்புகிறேன். நான் அநேகருக்குக் கொடுத்த கடன் திரும்பிவரவேயில்லை. உங்களுக்கும் அதே அனுபவமிருக்குமானால், உங்களுக்குத் திரும்பித் தரும் ஒருவர் கர்த்தரே. நான் கூறும் ஆலோசனை: உங்கள் குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கு கடனாகக் கொடுக்காதீர்கள், சும்மா இலவச ஈவாகக் கொடுங்கள்.

நீதிமொழிகள் 31ம் அதிகாரம் ஒரு நல்ல மாதிரியான சிறந்த மனைவியைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

> ***[20]சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்.** (நீதி. 31:20)*

திருமணமான பெண்ணே! உன்னைப் பொறுத்தமட்டில் இது உண்மையா? ஏன் உண்மையாக இருக்கக்கூடாது? இது உனக்குப் பொருந்துமா? இல்லையென்று கூறுவாயானால்,

இரண்டு எச்சரிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன்.

> [13]***ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்.*** *(நீதிமொழிகள் 21:13)*

ஏழையின் குரலைக் கேட்காததினாலே தான் நமது ஜெபங்களில் சில பதிலைப் பெற்றுக் கொள்ளாமல் உள்ளதா? நாம் ஏழைகளின் குரலுக்கு செவி சாய்க்கவில்லையானால் தேவன் நமது குரலுக்கு செவிசாய்க்க மாட்டார்.

> [27]***தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்; தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும்.*** *(நீதிமொழிகள் 28:27)*

மத்திய கிழக்கு நாடுகளைப் பற்றி அறிந்தவர்களுக்கு இது நன்கு தெரியும். ஒரு பிச்சைக்காரன் கை நீட்டிக் கேட்கும்பொழுது, நீ ஒன்றும் கொடுக்கவில்லையானால் அவன் உன் பின்னாலேயே தெருவில் தொடர்ந்து வந்து சாப வார்த்தைகளைக் கூறுவான். அவைகள் சாதாரணமான வார்த்தைகளன்று. அவைகளுக்கு ஆற்றல் உண்டு.

என் மனைவி அராபிய மொழி பேசும் எருசலேம் மக்கள் மத்தியில் வாழ்ந்துவந்தாள். பழை பட்டணப்பகுதியில் ஒரு கடைக்குச் சென்ற பொழுது ஒரு மனிதன் ஒரு பொருளை அவளிடம் விற்க முற்பட்டான். அது அதிக விலையுள்ளதாயிருக்கிறது என்று கூறிவிட்டு அவள் புறப்பட்டாள். அவள் அதை வாங்கவில்லை. அவள் தெருவில் நடந்து சென்றபொழுது அவள் தடுக்கி விழ முற்பட்டாள். அந்த கடைக்காரன் அவள் பேரில் ஒரு

சாபத்தை கூறியிருந்ததை அவள் உணர்ந்தாள். அன்பான சகோதர, சகோதரிகளே, மத்திய கிழக்கு நாடுகளில் ஆசீர்வாதங்கள், சாபங்களின் வல்லமையை உணராமல் அங்கே கடந்து செல்ல வேண்டாம். அவைகள் ஆற்றல் நிறைந்தவைகள்.

ஆமோஸ் 6ம் அதிகாரம் சுயநலத்தையும் அநியாயத்தையும் பற்றி பேசுகிறது. இதினிமித்தமாக ஒரு நாடே சுவடு தெரியாமல் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து போயிற்று.

> 3 *தீங்குநாள் தூரமென்றெண்ணிக் கொடுமையின் ஆசனம் கிட்டிவரும்படி செய்து,*
>
> 4 *தந்தக் கட்டில்களில் படுத்துக்கொண்டு, தங்கள் மஞ்சங்களின்மேல் சவுக்கியமாய்ச் சயனித்து, மந்தையிலுள்ள ஆட்டுக்குட்டிகளையும், மாட்டுத் தொழுவத்திலுள்ள கன்றுக்குட்டிகளையும் தின்று,*
>
> 5 *தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி,*
>
> 6 *பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடித்து, சிறந்த பரிமளதைலங்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள்; ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற்போகிறார்கள்.* (ஆமோஸ் 6:3–6)

இது கரிஸ்மேட்டிக் கூட்டம் போல் காணப்படுகிறதல்லவா? நாம் நன்கு அனுபவித்தோம். நல்ல பாடல் இருந்தது. சாப்பிட்டோம், உண்மையிலேயே மகிழ்ச்சியான வேளையே. ஆனால் ஒன்றுமில்லாதோரைக் குறித்த அக்கறை நமக்கு இல்லை. எல்லாரும் இப்படியில்லையாயினும் அநேகர் இவ்வாறே உள்ளனர். உங்களைக் குற்றப்படுத்தும்படியாக நான் இதைச் சொல்லவில்லை. உங்கள் பேரிலும் உங்கள் நாட்டின் பேரிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் வர வேண்டுமாயின் இதைக் குறித்து நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும்.

சொந்த அனுபவம்

"சகோதரன் பிரின்ஸ் அவர்களே நீங்கள் அதிகம் பிரசங்கம் செய்துள்ளீர்கள். நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்" எனக் கேட்கலாம். அதைப்பற்றி நான் சொல்லப்போகிறேன். ஆனால் இதைக்குறித்து நான் பெறுமையடித்துக் கொள்ளவில்லை. நான் நல்லவன் அல்லது நீதிமான் என்ற நிலையில் இதைச் செய்யாமல், கர்த்தர் எனக்குக் காட்டியதைச் செய்தேன்.

நான் இந்தியாவில் பிரிட்டிஷ் குடும்பத்தில் ஒரே குழந்தையாகப் பிறந்த நான் கேம்பிரிட்ஜிலும் ஈட்டனிலும் நான் படித்தேன். நான் பிறப்பிலேயே செல்வந்தனாகப் பிறந்தேன். பின்பு பிரிட்டிஷ் இராணுவத்தில் சேர்ந்து மத்திய கிழக்கு நாட்டைச் சென்று சேர்ந்தேன். சிறுவர்கள் பராமரிக்கும் இல்லத்தை நடத்தி வந்த என்னைவிட வயதான டென்மார்க்கு நாட்டைச் சேர்ந்த லீதியாள் என்ற பெண்ணைச் சந்தித்தேன். அப்பெண்ணை திருமணம் செய்யும்படி தேவனால் வழிநடத்தப்பட்டேன். லீதியாளிடத்திலும் தேவன் என்னைத் திருமணம் செய்யும்படி சொல்லியிருந்தார். அவளைத் திருமணம் செய்த அதே நாளில் என் மனைவி அந்த இல்லத்தில் வளர்ந்து வந்த எட்டுப் பெண் பிள்ளைகள் எனக்குக் கிடைத்தார்கள். நான் ஒரே பிள்ளை. எனக்கு சகோதரி யாரும் இல்லை. ஆகவே பெண்கள் பற்றி ஒன்றும் எனக்குத் தெரியாது. அக்குழந்தைகளில் ஆறுபேர் யூதப்பெண்கள், ஒருத்தி அராபியப்பெண், ஒருத்தி ஆங்கிலப்பெண்.

கடைசி குழந்தை முதல் அவர்களைப்பற்றி கொஞ்சம் சொல்கிறேன். என்னுடைய கடைசி மகள் ஆங்கிலேயப் பெண் கோவா பகுதியைச் சார்ந்த ஒருவரை திருமணம் செய்து கொண்டாள். அவர்களுக்கு ஒரு மகனும் மகளுமாக இரு குழந்தைகள் உள்ளனர். ஆகவே இவர்கள் இருவரும் பேரப்பிள்ளைகள்.

அராபியளான மகள் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ஒருவரை திருமணம் செய்து கொண்டாள். அவளுக்கு மூன்று குழந்தைகள், ஒரு பேரக் குழந்தை. ஆகவே எனக்கு மூன்று பேரக்குழந்தையும் ஒரு கொள்ளுப்பேரக் குழந்தையும் உண்டாயிற்று.

இப்பொழுது கவனத்திற்குரிய ஒரு செய்தி! என்னுடைய யூத மகளுள் ஒருத்தி மேக்டாள் என்பவள், சுவிசேஷ வேலையில் ஈடுபட்டுள்ள, மனைவியை இழந்த ஒருவரை மணந்தாள். அவருடைய இறந்து போன முதல் மனைவிக்கு ஆறு குழந்தைகள்; இவளுக்கு ஐந்து குழந்தைகள். ஆக எனக்கு பதினொரு பேரப்பிள்ளைகள். மேக்டாளுக்கு இருபத்தெட்டு பேரக்குழந்தைகள். எனக்கு இருபத்தெட்டு கொள்ளுப்பேரப்பிள்ளைகள். இது கதையின் முடிவல்ல. இன்னும் இரண்டு தலைமுறை பற்றி நான் கூறக்கூடும். ஆகவே எனக்கு அனுபவம் உள்ளது.

நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் எனக் கேட்கலாம். நான் இதற்கு பெருமை கொள்ள முடியாது எனினும் நான் என் குடும்பத்தில் அன்பு கொள்ளலானேன். நோயுற்ற ஒரு யூத குழந்தையின் மூலம் 1928லிருந்து நூற்று ஐம்பது அங்கத்தினர்களைக் கொண்ட பெரிய குடும்பம் உருவாயிற்று. நாங்கள் பிரிட்டனிலிருந்து கனடாவரை, அமெரிக்க ஐக்கிய நாடு ஆஸ்திரேலியாவரை பரந்து வாழ்கிறோம். இதில் விந்தையென்னவெனில் நாங்கள் ஒரே குடும்பமே. இதை யாவரும் ஒப்புக் கொள்வர். குடும்பம் உடையவில்லை. நாங்கள் பிளவுபடவில்லை. அது தேவனுடைய கிருபையே. இதில் நான் பெருமை கொள்ளாமல் தேவனுக்கே நன்றி செலுத்துகிறேன்.

ஆகவே என் முதல் திருமணத்தில் எட்டு குழந்தைகள். லீதியாளும் நானும் ஆப்பிரிக்காவிற்கும் கென்யாவிற்கும் கல்வித்துறையில் பணிபுரியும்படி சென்றோம். ஆப்பிரிக்க பாடசாலைகளுக்கு ஆப்பிரிக்க ஆசிரியர்களை பயிற்றுவிக்கும்

கல்லூரியில் நான் பிரின்ஸ்பாலாக இருந்தேன்.

ஒரு நாள் மாலை ஐந்து மணிக்கு ஒரு வெள்ளைக்காரி கருப்பு ஆப்பிரிக்க தம்பதியருடன் ஒரு கருப்புக் குழந்தையை அழுக்கான துண்டில் சுற்றிப்பிடித்துக் கொண்டுவந்து நின்றாள். அவர்கள் "இக்குழந்தையின் தாயார் குழந்தைப்பேற்றில் மரித்துப்போனாள். இக்குழந்தை ஆதரவற்று ஆப்பிரிக்கக் குடிசை ஒன்றில் தரையில் கிடந்தது. யாரோ இவளை எடுத்த ஆஸ்பத்திரியில் விட்டனர். அங்கு இவள் ஆறுமாதம் இருந்தாள். ஆனால் ஆஸ்பத்திரியில் தற்சமயம் இக்குழந்தையை இனிமேல் பராமரிக்க முடியாது எனக் கூறிவிட்டனர். கடந்த மூன்று நாட்களாக இக்குழந்தையைப் பாதுகாக்கக் கூடிய ஆப்பிரிக்கர்களோ, ஆசிய நாட்டாரோ, ஐரோப்பியரோ உள்ளனரா என தேடிப்பார்த்து வருகிறோம். மிஷன் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அங்கே 'பிரின்ஸ் இப்படிப்பட்ட குழந்தைகளை எடுத்துக் கொள்வார்'" என்றனர்.

"நல்லது நாங்கள் முன்பு அப்படிச் செய்து வந்தோம். இப்பொழுது அப்படிச் செய்வதில்லை. காலைமுதல் மாலை வரை எங்களுக்குள்ள வேலைக்கே நேரம் போதவில்லை" என்றோம்.

அவர்கள் "நாங்கள் மிகவும் களைப்பாக இருக்கிறோம். கொஞ்சம் உட்கார்ந்து விட்டுப்போகிறோம்" என்றார்கள். அவர்களுக்கு உட்கார இருக்கை அளித்து, குடிக்கத் தண்ணீர் கொடுத்தோம். பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள் கழித்து எழுந்து புறப்பட ஆரம்பித்தனர். அந்த வெள்ளைக்காரப் பெண் காரணமின்றி என்னைக் கடந்து நடந்து சென்றாள். அந்த சிறிய கருப்புக் குழந்தை தன் இடது கையை என் பக்கம் நீட்டி "என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்பது போலிருந்தது. அறையின் மறுபக்கத்திலிருந்த என் மனைவியை நான் நோக்கிப் பார்த்தேன். பொதுவாக இதைப் போன்றதொரு தீர்மானம்

எடுப்பதற்கு முன்பு நாங்கள் ஜெபிப்பது உண்டு. ஆசீர்வதிக்கப்பட்ட வீதியாள் "ஒரு தொட்டில் உண்டாக்கவும் சிறு குழந்தைக்கான உடை தயாரிக்கவும் ஒருவார காலம் தாருங்கள். பின்பு குழந்தையை இங்கே கொண்டு வாருங்கள்" என்றாள். இவ்வாறு எங்களுக்கு ஒன்பதாவது குழந்தை கிடைத்தது.

நான் ரூத்தைத் திருமணம் செய்த பொழுது பின்னும் மூன்று யூத குழந்தைகள் கிடைத்தன. ஆகவே எனக்கு பதினொரு பெண்களும் ஒரு பையனுமாக பன்னிரு குழந்தைகள் கிடைத்தன.

"நம் வாழ்க்கை தூங்கி வழிகிறது" என்று சொல்வதற்கில்லை என்று நான் ரூத்திடம் சொல்வது உண்டு. கர்த்தரை அறிந்த நாளிலிருந்து வாழ்வு உற்சாக முடையதாகவே உள்ளது. நான் அறிந்திராத தேவைகளையும் சந்தர்ப்பங்களையும், அறை கூவல்களையும் சந்தித்தேன். எனக்கு 84 வயதாகிறது. நான் இன்றும் தொடர்ந்து செல்கிறேன்.

உங்களுடைய பதில்

நான் சொல்வது சரியானால் நீங்கள் இதைக் குறித்து செய்யப்போவது யாது என்பது கேள்வியாக உள்ளது. இதைக் குறித்து ஏதாவது செய்யப்போகிறீர்களா? நம்மனைவரும் செய்யக்கூடிய ஒரு காரியத்தைச் சொல்கிறேன். கணவனை இழந்த தாய்மார்களுக்காக என் இதயத்தில் பாரம் உண்டாகிறது. நான் ரூத்தை மணந்த பொழுது அவள் பராமரிப்பில் மூன்று குழந்தைகள் இருந்தன. அவளது முதல் கணவன் அவளைக் கைவிட்டு சென்றுவிட்டார். இப்படித் தனித்திருக்கும் பெரும்பாலான தாயாருக்கு மிகுந்த பிரச்சினையே. இதை நீங்கள் உங்கள் சொந்த அனுபவத்தில் அறிந்திருக்கலாம்.

இதைப்பற்றி திருச்சபைக்கு ஒரு பொறுப்புண்டு. ஒரு

சகோதரனிடம் இதைச் சொன்ன பொழுது, "நல்லது அவர்களின் பாவமே இந்தப் பிரச்சினைக்கு காரணம்" என்றார். அது உண்மையன்று. சில பெண்கள் திருமணம் செய்யாது தாயானவர்கள் என்றாலும் அப்படியல்ல. அவர்கள் தவறு செய்த பொழுதிலும், அவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டிய அவசியமில்லை என்று எங்கே சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளது. அவர்களுக்கு இரக்கம் தேவை. அநேகர் தாங்கள் செய்யாத குற்றத்திற்காக அவதிப்படுகின்றனர். இப்படிப்பட்ட தனிமையான தாயார்களுக்கு திருச்சபை உதவ வேண்டும்.

மகிழ்ச்சிக்குத் திறவுகோல் அன்பைப் பெறுவதல்ல, அன்பு செலுத்த ஒரு நபர் இருப்பதே என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதுவே வாழ்வை இனிமையாக்கும். உன் அன்பிற்குப் பாத்திரமானவர்கள் வெகுதொலைவில் இல்லை. ஒரு வேளை அவர்கள் நேசிக்கப்படத்தகாதவர்களாய் இருக்கலாம். ஒரு வேளை அவர்கள் கசப்புள்ளவர்களாக, கோபப்படுபவர்களாக தேவனுக்கு விரோதமாக, நான் ஏன் இந்தச் சூழ்நிலையில் இருக்கிறேன். தேவன் என்னை சரியாக நடத்தவில்லை என்று கூறுபவர்களாக இருக்கலாம். நீ மெய்யாகவே மகிழ்ச்சியுடன் இருக்க விரும்பினால், தேவையில் உள்ளோரிடம் கருணைகாட்டு. உன் வாழ்வே மாற்றமடையும், நேசிக்கப்படுவத ஓர் அற்புதமான காரியம். நான் பாத்திரவானாக இல்லாவிட்டாலும், அநேகர் என்பால் அன்பு பாராட்டுகின்றனர். ஒதுக்கப்பட்டவர்களை நேசிப்பது என் இதயத்திற்கு மகிழ்ச்சியை அளிக்கக் கூடியது. இறுதியில், எனக்கு ஒரு நண்பர் கிடைத்தார் என்று கூறி அவர்கள் புன்முறுவல் செய்வதைக் காண்பது மகிழ்ச்சியான அனுபவம்.

சுயநலம் துயரத்தை திறக்கும் திறவுகோல். நீ ஆவிக்குரியவனாக, ஒப்புக் கொடுத்தவனாக இருப்பினும், இதில் மோசமான நிலையில் இருக்கலாம். ஆகவே தனித்து விடப்பட்ட தாய்மார்களுக்கு நான் என்ன உதவி

செய்யப்போகிறோம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். வீடும் குடும்பமாய் இருப்பவர்களுக்கு இது ஒரு சவால். உன் உதவியினால் பலன் பெற இருக்கும் தனித்து விடப்பட்ட தாயார் உங்களுக்குத் தொலை தூரத்தில் இல்லை. ஒரு காரைப் பராமரிப்பது ஒரு பெண்ணுக்குக் கடினமான காரியம். எனக்கும் இது கடினமானதே. கார்களைப் பற்றி பல காரியங்கள் எனக்குத் தெரியாது. என் மருமகன்கள் காரைப் பற்றி தெரிந்திருப்பதால் எனக்குக் கவலையில்லை. ஆனால் ஒரு பெண்ணுக்கு இது சிரமமான காரியம். ஆனாலும் அவளுடைய வாழ்க்கைக்கு அந்த கார் அவசியமானதாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு உதவும் பொழுது உங்களுக்கு ஒரு நண்பர் உண்டாகிறார். எடுத்த எடுப்பிலேயே அவளை கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்த விரும்புகிறேன் என்று சொல்ல ஆரம்பிக்காதிருங்கள். “நீங்கள் கஷ்டப்படுவதைக் கண்டு உதவி செய்ய விரும்புகிறேன். நான் உதவ முன்வரட்டுமா?” என்று கேளுங்கள். கொஞ்ச காலத்தில் அவளுடைய வாழ்விலும் அவளுடைய குழந்தைகளின் வாழ்விலும் மாற்றம் உண்டாகும்.

“Husbands and Fathers” என்ற நூலை இப்பொழுதுதான் நான் எழுதி முடித்தேன். மேற்கத்திய உலகத்தின் பிரச்சினை, கட்சி மாறிய தகப்பன்மார்—அதாவது இவர்கள் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளை நிறைவேற்றாது தவறிய கணவன்மார்களும் தகப்பன்மார்களுமாவர். இதன் விளைவால் சமுதாயத்தில் அதிகக் குழப்பம். சமுதாய முன்னேற்ற திட்டங்கள் பலவற்றையும் விட தேவனுடைய வழியே மேலானதாக உள்ளது. குடும்பம் தேவனின் அமைப்பு. குடும்பத்தின் இடத்தை எடுக்கக் கூடிய ஒரு அமைப்பை இன்னும் எவரும் கண்டிலர். குடும்பத்தின் பகுதியாயிருப்பது ஒரு பெரும் சிலாக்கியம். அவர்களுக்காகவும் எனக்காகவும் நான் ஜெபிக்கிறேன். எத்தனைபேர் எனக்காக ஜெபிக்கிறார்கள்

என்பதை அறிந்து நான் வியப்படைகிறேன்.

எனக்கு கேன்சர் இருப்பதாக சமீபத்தில் கூறப்பட்டது. அநேகர் தனிப்பட்ட நிலையில் எனக்காக ஜெபிப்பதாகவும் சபையார்களாக ஜெபிப்பதாகவும் கடிதம் எழுதித் தெரிவித்தனர். அந்த ஜெபத்தை அவர் அக்கறை எடுத்துச் செய்வதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

உங்களில் சிலர் மதத்திற்கடுத்த வார்ப்பிலிருந்து விடுபட்டு இப்படிப்பட்ட தீரச் செயல்களைச் செய்ய முற்படுங்கள். நான் அவ்வாறு செய்தேன். யார் ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதின் மூலம் எட்டு குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள்? அது என்னுடைய பாணி. இது மதத்திற்கடுத்த கட்டுப்பாடுகளிலிருந்து என்னை விடுவித்தது. உண்மையான மக்களின் உண்மையான பிரச்சினையுடன் இது என்னைத் தொடர்புபடுத்தியது.

ஒரு தீர்மானம் எடுக்கும்படி உங்களை வழி நடத்த நான் விரும்புகிறேன். இந்நூலை வாசித்திருக்கும் நீங்கள் கீழ்க்கண்ட ஜெபத்தைச் செய்ய விரும்புவீர்களா எனப்பாருங்கள்:

> *"கர்த்தாவே! நான் செய்யவேண்டியதை செய்யவில்லை. நான் இப்பொழுது செய்வதைவிட அதிகம் செய்யக்கூடும். உண்மையைச் சொல்லப் போனால் நான் சுயநலமுடையவனாகவே இருக்கிறேன். நேசிக்கப்படாதவர்களை நேசிக்கும்படி என்னை ஒப்புக் கொடுக்க விரும்புகிறேன். கவனிக்கபடாமல் இருப்பார் கவனிக்கப்பட அக்கறை செலுத்த முன்வருகிறேன்."*

உன் வாழ்விற்கு தேவன் நியமித்த திட்டத்தின் படி மற்றவர்களுக்கு ஊழியனாயிருக்க உன்னை அர்ப்பணி.

யாராவது அக்கறை எடுத்து ஏதாவது செய்யுங்கள்!

20 வழிகளில் நீங்கள் இதில் ஈடுபட முடியும்

நீங்கள் "அனாதைகளை, விதவைகளை, ஏழைகளை அக்கறை எடுத்துக் கவனிப்பதாக என்னை ஒப்புக் கொடுத்திருக்கிறேன். இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்கலாம்.

முதலாவதாக, உங்கள் திறமைகளைக் குறித்த கணிப்பு செய்யுங்கள்—கற்றுத்தருவது, கட்டுவது, சித்திரம் வரைவது, சமைப்பது, செவிசாய்த்துக் கேட்பது, பணவரவு செலவு பட்டியலிடுவது—இந்தத் தாலந்துகளை பயன்படுத்தக்கூடிய இடத்தைக் கண்டு பிடியுங்கள். (80 சதவீதமானோருக்கு!) ஒரு தாலந்து மட்டுமே உள்ளது பரவாயில்லை, அதனைப் பயன்படுத்துங்கள்.

குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள், திருமணமாகாத தாயாரானவர்கள், வீடிழந்ததால் தாங்களே சோகமாக அவதிக்குள்ளாயிருப்பவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்ய சில கிறிஸ்தவர்கள், தயக்கம் கொள்ளலாம். டென்னசி பட்டணத்தில் உள்ள ஒரு திருச்சபைக்கு சமீபகாலத்தில் டெரிக் பிரின்ஸ் ஒரு சவாலை வைத்தார்: பாவிகளுக்கு இரக்கம் காட்டுவதில் இயேசு என்றாவது தடை கூறியுள்ளாரா? எனக்கேட்டார்.

இதைக் குறித்து சொல்லப்படும் அடுத்த சாக்குபோக்கு "எனக்கு நேரமில்லை" என்பதாகும். நமக்கு பிரியமானதைச் செய்ய எப்படியும் நேரம் கண்டுபிடிக்க முடியும் என்பது உண்மை. ஏழைகளுக்கு உதவ வசதியான வழிகள் சிலவே உள்ளன. உங்களுக்கு இதற்குச் செலவிட நேரமில்லையானால், இதற்காக நேரம் செலவிடுபவர்களை ஆதரிக்கவும்.

நான் கூற இருக்கும் வழிகள் அனாதைகளையும் விதவைகளைவும் தேவையுள்ள மற்றவர்களையும் சந்தித்து உதவ உங்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை முறையை வழி வகுத்துத்தரும்.

செய்ய வேண்டியவை:

ஆராய்ச்சியின் மூலம் பயனுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உங்கள் சமுதாயத்தின் நிகழ்ச்சிகளுக்கு உதவுங்கள். ஏற்கெனவே ஏழைகளுக்கு உணவு வழங்கி இருப்பிடம் அமைத்துத்தரும் திருச்சபைகள் உள்ளனவா? எனப்பாருங்கள். அவர்களுடைய சேவைக்கு ஆதரவளிக்கவும் உங்கள் தொலைபேசி புத்தகத்தை இதைக் கண்டுபிடிக்க புரட்டிப்பார்க்கவும். வயதானோருக்கு உணவும் தேவைப்பட்டோருக்கு சட்ட ஆலோசனையும் வழங்கும் குழுக்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு உதவவும்.

தாய்மார்களுக்கு உதவி:

உங்கள் சபையிலே உதவி தேவைப்படும் ஒரு தாயாரைத் தேர்ந்தெடுக்கவும். அவர்கள் ஒரு விதவையானவர்களாகவும் அவர்களின் குழந்தைகள் கைவிடப்பட்டவர்களாகவும் இருக்கலாம். அந்தக் குழந்தையின் பராமரிப்பை ஏற்றுக்கொண்டு தாயாகவும் தந்தையாகவும் செயற்படும் அவர்களுக்கு தனிப்பட்ட தங்கள் வேலைகளை முடிக்க குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு உதவவும்.

வர விடுங்கள்

அனாதைக் குழந்தைகளுக்கு உங்கள் இல்லத்தில் உணவளியுங்கள். அனேக முனிசிபல் பகுதிகளிலே சிறப்புத் தேவைகளுள்ள குழந்தைகள் அன்பு செலுத்தும் பெற்றோர்களுக்குாக ஏங்கித் தவித்து நிற்கின்றனர்.

உணவுப்பண்ட விநியோகம்

மிட்டாய்கள், தின்பண்டங்களின் பொட்டலங்களை எடுத்துச் செல்லுங்கள் பசியாயிருக்கும் குழந்தைகளைச் சந்திக்கும் பொழுது இப்பொட்டலங்களை அவர்களுக்குக் கொடுங்கள்.

விதவைக்கு உதவுங்கள்

விதவைக்கு பலசரக்கு பொருட்கள் வாங்க உதவுங்கள். நேரம் எடுத்து அவர்களுடன் உட்கார்ந்து பேசுங்கள். பல புதிய பாடங்களை நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்.

சிறப்பு பிரசவங்கள்

கர்ப்பிணிகளுக்கும் புதிதாக குழந்தை பெற்ற ஏழைத் தாயார்களுக்கும் உதவுங்கள். ஒரு நபரிடம் ஒரு நேரத்தில் பேசி உதவுங்கள். புதிதாகக் குழந்தை பெற்ற தாயாருக்கு ஆலோசனை தேவைப்படும்.

ஆசிரியராக உதவுதல்

வாசிக்க சொல்லிக் கொடுப்பதிலும், கணிதம் சொல்லித் தருவதிலும் சில திட்டங்களை திருச்சபைகள் மேற்கொண்டிருக்கலாம். தேவைப்பட்ட கல்வி உதவியில்லாதிருக்கும் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருவதில் வாரத்திற்கு சில மணிநேரம் நீங்கள் செலவிடலாம். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நீங்களே ஆரம்பிக்கலாம். இதற்கான ஆலோசனையை நல்ல பாடசாலை ஒன்றிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

உபவாசம் செய்

உங்கள் பகுதியிலுள்ள அனாதைகள், விதவைகளின் நலனுக்கு ஏசாயா 58ல் வாசிப்பது போல் உபவாசத்தை மேற்கொள்ளவும். இப்படிப்பட்டவர்களுக்கு உதவும்படி

தேவன் உங்களுக்கு வழிகாட்ட ஜெபியுங்கள்.

பொன்னான ஆண்டுகள்

குழந்தை பராமரிக்கும் தலங்களுக்கு உங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள். முதியவர்கள் ஒரு குழந்தையின் முகத்தில் ததும்பி வெளிப்படும் புன்முறுவலினால் மகிழ்ச்சியடைவார்கள். அந்த நிறுவனத்தின் பொறுப்பாளரைச் சந்தித்து இவர்களைச் சந்திப்பதற்கான நேரத்தை குறிக்கவும். இவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்னும் ஆலோசனையைப் பெறுங்கள். உங்களுக்கு குழந்தைகள் இல்லையாயின் மற்ற விதத்தில் உதவுங்கள். அக்குழந்தைகளின் தலைக்கு எண்ணெய்பூசி தலைவாரி விடுங்கள். அவர்களுடன் உட்கார்ந்து பேசுவதே உதவியாயிருக்கும்.

குழந்தைகளின் கவனிப்பு

வேலை செய்யும் தாய்மாருக்கு விட்டுச் செல்லும் குழந்தைகளைப் பராமரிக்க உதவுங்கள்.

பணதானம்

சமுதாய சேவை நிறுவனங்களுக்கு உங்கள் நேரத்தாலும் பணத்தாலும் உதவுங்கள். நாட்டில் இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இந்த நிறுவனத்துடன் சேர்ந்து இருக்க புகலிடமும் உணவும் வழங்கி உதவுங்கள்.

துணி வழங்குதல்

உங்களுடைய பழைய உடைகள், அறை அணிகலங்கள் முதலியவற்றால் இருப்பிடமற்றவர்களுக்கு உதவுங்கள்.

சிறைச்சாலை ஊழியம்

உன் நேரத்தை சிறைச்சாலை ஊழியத்திற்குச் செலவிடு. பெண்களின் சிறைக்குச் சென்று ஊழியம் செய்பவர்களுடன்

பெண்கள் சேர்ந்து செல்லலாம். சிறை சென்றோரின் குடும்பத்திற்கு உதவுங்கள்.

பாடசாலைப் பிள்ளைகள்

ஓராண்டிற்கு ஒரு பாடசாலையில் ஒரு வகுப்புப் பிள்ளைகள் பேரில் கவனம் செலுத்தலாம். அவ்வகுப்புப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பது எவ்வாறு என்னும் ஆலோசனையை தலைமை ஆசிரியர் தருவார். சாப்பாட்டு இடைவேளையில் இவர்களுக்கு உதவலாம். இவர்களுக்குத் தேவையான பாடசாலை சாதனங்களை வாங்கி வழங்கலாம். அவர்கள் உல்லாசப் பயணம் செல்ல பண உதவி செய்யலாம்.

பானம் தருதல்

சூப் போன்ற சத்துள்ள உணவை வாங்கித் தரலாம். அவர்கள் காணும்படி புன்முறுவல் செய்யுங்கள். அவர்கள் பெயர்களைக் கற்றுக் கொள்ளுங்கள். அவர்களுக்கு நீங்கள் தரும் மதிப்பு அவர்களின் அந்த நாளை இனியதாக்கும்.

குடும்பத்தினக்கு உதவி

உங்கள் சபையில் பிரச்சினையுள்ள குழந்தைகளுக்கு உதவுங்கள். அவர்களை உணவிற்கு அழைத்து உணவு கொடுங்கள். பணம் செலுத்த முடியாத பில்களைக் கட்ட உதவுங்கள். குடும்ப தேவைகளை முடிந்த அளவு சந்தியுங்கள்.

இலவச உணவு

சாப்பாட்டு கூப்பன்களை ஹோட்டலில் பெற்று ஏழைகளை சென்று சாப்பிடச் செய்யுங்கள். தற்காலிகமாக தங்க இடம் தேவைப்பட்டால் முடியுமான அளவிற்கு உதவுங்கள்.

மருத்துவ உதவி

நீங்கள் மருத்துவர்களாயின் மருத்துவப் பணியினை இலவசமாக ஆதரவற்றவர்களுக்கு வழங்குங்கள். நீங்கள் மருத்துவர்களோ அன்றி தாதியாகவோ இல்லையாயின், மருத்துவப் பணியாளர்களுக்கு உதவியாளர்களாகச் சென்று உதவுங்கள்.

தேவனுடைய வார்த்தையை அறிவித்தல்:

> [17]***நான் நன்மை செய்யப் படிப்பேன்; நியாயத்தைத் தேடுவேன். ஒடுக்கப்பட்டவர்களை ஆதரித்து, திக்கற்ற பிள்ளைகளின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரிப்பேன்.***

(*ஏசாயா* 1:17*ம் வசனத்தை சொந்தத் தீர்மானம் எடுப்பது போல் கூறப்பட்டுள்ளது*)

இது மார்க்கே செல்பி "Proclamation" *என்ற பத்திரிகையில் எழுதிய கட்டுரை. இது நமது நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப எடுத்தாளப்பட்டுள்ளது.*

❍ ❍ ❍ ❍ ❍